JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **8/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 2** | Prosecution /Defence / Court | |
| Name | **Vijaya** | Caste | |
| Husband's Name | **Sakthi** | Calling | |
| Village | **Kongu college** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**A**1 **And A**2 **present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08.07.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக உள்ளேன். சுமார் 10 வருடத்திற்கு முன்பாக இந்த சம்பவம் நடைபெற்றது சரிவர தேதி நினைவில் இல்லை. சம்பவ நடந்த நாள் வெள்ளிக்கிழமை ஆகும். மாலை 5.30 மணி இருக்கும். ஆஜர் எதிரிகள் இருவரும் என் கணவரை அடித்து விட்டதாக என்னிடம் என் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் நபர் சொல்லியதன் பேரில் வந்த பார்த்த போது என் கணவரின் சட்டையும், முகம் முழுவதும் இரத்தமாக இருந்தது. என் கணவர் சம்பவ சம்பவத்தன்று அணிந்திருந்த இரத்தம் தோய்ந்த சட்டை இதுதான். வெள்ளை கலரில் பச்சை கோடு போட்ட சட்டை ஆகும். சட்டை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. நானும் இன்னொரு நபரும் பெருந்யதுறை அரசு மருத்துவமனைக்கு என் கணவரை சிகிச்சைக்காக சேர்த்தோம். பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** சாட்சி ஆறுமுகம், ரவி, ஐயப்பசாமி ஆகியேர்கள் என்னுடன் என் வீட்டிர் தான் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். யார் என்னிடம் வந்து கூறினார்கள் என்றால் ராசம்மாள் என்பவர் வந்து சொன்னார். அவர் சொன்ன பின்னர் தான் விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். மருத்துவமனையில் நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் காலை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை ஒரு முறை விசாரித்தார்கள். போலீசார் என் கணவரை விசாரித்து விட்டு என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

2. என் கணவர் சொன்ன தகவலை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். என் கணவரின் பொய்யாக புகாருக்கு நான் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.பொ. 1 யைப்போல் நிறைய சட்டைகள் உள்ளது என்றால் சரிதான். வழக்கிற்காக அ.சா.பொ.1 சட்டை என் கணவருடையது என பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை